## பாடம் - 4
## மறுமை நாளின் அடையாளங்கள்

## الدرس الرابع
## من علامات قيامة الساعة

அல்லாஹ் இவ்வுலகத்தை நிரந்தரமாக இருப்பதற்காக படைக்கவில்லை. மாறாக அதற்கென முடிவு நாள் வரும். அந்நாளே மறுமை ஏற்படக்கூடிய நாளாகும். அது ஐயத்திற்கிடமில்லாத உண்மையும் ஆகும்.

﴿إِنَّ السَّاعَةَ لَآتِيَةٌ لَا رَيْبَ فِيهَا وَلَكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يُؤْمِنُونَ﴾ [غافر:٥٩]

அல்லாஹ் கூறுகிறான்: 'அந்த நாள் வரக்கூடியதே! அதில் எந்தச் சந்தேகம் இல்லை.' (40:59)

﴿وَقَالَ الَّذِينَ كَفَرُوا لَا تَأْتِينَا السَّاعَةُ قُلْ بَلَى وَرَبِّي لَتَأْتِيَنَّكُمْ﴾ [ سبأ:٣]

'அந்த நாள் எங்களிடம் வராது என்று இறைநிராகரிப்பாளர்கள் கூறுகின்றனர். அவ்வாறல்ல! என் இறைவன் மீது ஆணையாக! அது உங்களிடம் வரும் என்று கூறுவீரா!' (34:3)
இறுதி நாள் சமீபத்தில் இருக்கிறது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿اقْتَرَبَتِ السَّاعَةُ﴾ [القمر:١]　﴿اقْتَرَبَ لِلنَّاسِ حِسَابُهُمْ وَهُمْ فِي غَفْلَةٍ مُعْرِضُونَ﴾ [الأنبياء:١]

'அந்த நாள் நெருங்கிவிட்டது.' (54:1) 'மனிதர்களுக்கு அவர்களின் விசாரணை நெருங்கி விட்டது. அவர்களோ அதைப் புறக்கணித்து கவனமின்றி உள்ளனர்.' (21:1)
எனினும் அது சமீபத்தில் இருக்கிறதென்பது மனிதர்கள் விளங்கி வைத்தி ருக்கும் அளவைப் பொருத்ததல்ல. மாறாக அல்லாஹ்வின் ஞானத்தைப் பொருத் ததாகும். உலகில் கடந்துவிட்ட கால அளவைப் பொருத்ததாகும். மறுமை பற்றிய அறிவு அல்லாஹ் தனக்கே சொந்தமாக்கிக் கொண்ட மறைவான விஷயங் களிலுள்ளதாகும். அவன் இவ்விஷயத்தை தன் படைப்புகளில் எவருக்கும் அறிவித்துக் கொடுக்கவில்லை.

﴿يَسْأَلُكَ النَّاسُ عَنِ السَّاعَةِ قُلْ إِنَّمَا عِلْمُهَا عِنْدَ اللهِ وَمَا يُدْرِيكَ لَعَلَّ السَّاعَةَ تَكُونُ قَرِيبًا﴾ [الأحزاب:٦٣]

அல்லாஹ் கூறுகிறான்: '(நபியே!) மறுமை நாள் பற்றி மக்கள் உம்மிடம் கேட்கின்றனர். ஷஅது பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது எனக் கூறுவீராக! அந்த நாள் சமீபத்தில் இருக்கக்கூடும் என்பது உமக்கு எப்படித் தெரியும்?' (33:63)
நபி(ஸல்) அவர்கள் இறுதி நாள் நெருங்கிவிட்டதை அறிவிக்கக்கூடிய அடையாளங்களைக் கூறியுள்ளனர். அவை:

- தஜ்ஜால் வருவது, அவனுடைய வருகை மக்களுக்கு மிகப் பெரும் குழப்பமாக அமையும். சில அற்புதங்களைச் செய்து காட்டுவதற்கு அல்லாஹ் அவனுக்கு சக்தி வழங்குவான். அதன் மூலம் பெரும்பாலான மக்கள் ஏமாந்து போய்விடுவார்கள். அதாவது தஜ்ஜால் வானத்திற்கு உத்தரவு போடுவான். அது மழையைப் பொழியும். புற்பூண்டுகளை முளைவிக்கும்படி பூமிக்குக் கட்டளையிடுவான். அது அவற்றை முளைவிக்கும். இறந்தவனை உயிர்ப்பிப்பான். இதுபோன்ற இன்னும் பல அற்புதங்களைச் செய்வான்.
- அவனைப் பற்றி நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: அவன் ஒற்றைக் கண்ணன். சொர்க்கம், நரகம் போன்றதைக் கொண்டு வருவான். அவன் சொர்க்கம் என்று கூறுவது நரகமாகும். அவன் நரகமென்று கூறுவது சொர்க்கமாகும். அவன் பூமியில் நாற்பது நாட்கள் இருப்பான். அதில் ஒரு நாள் ஒரு வருடம் போன்றும் ஒரு நாள் ஒரு மாதம் போன்றும் ஒரு நாள் ஒரு வாரம் போன்றும் ஏனைய நாட்கள் சாதாரண நாட்கள் போன்று மிருக்கும். பூமியில் மக்கா, மதீனா தவிர அவன் நுழையாத இடங்களே இருக்காது.
- மேலும் மறுமையின் அடையாளங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது சுபுஹூத் தொழுகை நேரத்தில் டமாஸ்கஸின் கிழக்குப் பகுதியிலுள்ள வெள;ளை மனாராவிலிருந்து ஈஸா(அலை)அவர்கள் இறங்கி வருவார்கள். அங்கு அவர்கள் சுபுஹூத் தொழுகையை மக்களுடன் தொழுவார்கள். அதன் பின்னர் தஜ்ஜாலை தேடிச் சென்று கொன்றுவிடுவார்கள். சூரியன் மேற்கில் உதிப்பதும் இறுதி நாளின் அடையாளமாகும். அதை மக்கள் காணும்போது பயந்து நடுங்கி நம்பிக்கை கொள்வார்கள். எனினும் அவர்களின் நம்பிக்கை அவர்களுக்குப் பலன ளிக்காது. இறுதி நாளுக்கு இன்னும் பல அடையாளங்கள் இருக்கின்றன.